*1979 மார்ச் 22]*

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) 1973–74 ஆம் ஆண்டில் 'கேர்' நிறுவனத்திடமிருந்து தமிழ்நாடு பால்வள நிறுவனம் பால் பவுடர் எதுவும் வாங்கவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியை போட்டதின் நோக்கம், இந்த பால்வள நிறுவனம் இருக்கிறதே, இது 1973-ல் 3 இலட்சம் ரூபாய் நஷ்டத்தில் இயங்கியிருக்கிறது. 1972-ல் 23 இலட்சம் ரூபாய் நஷ்டத்தில் இயங்கியிருக்கிறது. 1972-ல் 23 லட்சம் ருபாய் நஷ்டம் என்றிருக்கிறது, 1973-ல் 3லட்சம் ரூபாய் மட்டும் தான் நஷ்டம் என்றிருக்கிறது, இப்படி ஒரேயடியாக 20 லட்சம் ருபாய் நஷ்டம் இல்லாமல் குறைக்கப்பட்டது என்றால் அதற்கு அந்த வருடத்தில் பால் பவுடர் போன்றவை வாங்கியிருக்கக் கூடும். ஆதலால், இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் ஆராய் வார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர் களே, மூலக் கேள்வி 'கேர்' நிறுவனத்திடமிருந்து பால்பவுடர் பெறப்பட்டதா என்பது, என்னுடைய பதில் இல்லை என்பது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பால்வள நிறுவனம் யாரிடத்தி லிருந்து பால்பவுடரை பெற்றுக்கொள்கிறது என்பதைத் தெரிந்து கொண்டு கேட்டிருந்தால் அதை விளக்கியிருக்க முடியும். தலை வர் அவர்களுடைய அனுமதியோடு, ஒரு நிமிடத்தில் இதை விளக்கிவிடுகிறேன்.

[முற்பகல் 9–40]

நாம் இந்திய பால்வள நிறுவனத்தின் சார்பில், (ஐ.டி.சி.) அதாவது இந்திய பால் அபிவிருத்தி கழகத்திலே வாங்கி, இங்கே நாம் அதை பாலாக மாற்றி இப்போது சென்னை நகரத்திலே விநியோகம் செய்து வருகிறோம். இந்த பால் பவுடரை அவர்கள் நமக்கு பாதி விலைக்கு இந்த ஜுன் மாதம் வரை தரயிருக்கிறார் கள். இந்த விலைக்குத் தருவதால், நமக்கு லாபம் வர முடி கிறது. அதன் காரணமாக இப்படி இருக்கிறது என்ற கருத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## மாயூரம் அரசு மருத்துவ மனை.

*வினா எண் 517—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாயூரம் நகரிலுள்ள அரசினர் பொது மருத்துவ மனையில் படுக்கைகளில் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

*1979 மார்ச் 22]*

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, மாயூரம் நகரத்திலுள்ள அரசினர் பொது மருத்துவ மனையில் படுக்கை வசதி போதாமல், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் பேராசிரியர் அவர்கள் இந்தப் பொறுப்பிலே இருந்தபோது, 36 படுக்கைகள் கொண்ட ஒரு புதுப் பிரிவு அமைக்கப்பட்டது. அதுவும் போதவில்லை. இப்போது ஜனத்தொகை பெருகிவருகின்ற காரணத்தால், இந்த மாயூரம் அரசினர் பொது மருத்துவ மனையில் மேலும் படுக்கை வசதிகளை அமைத்துக் கொடுப்பதற்கு இந்த அரசு முன்வருமா? இன்னொன்று, ஈ.சி.ஜி. போன்ற சாதனங்கள் அங்கு வேண்டுமென்று நான் முதல் அமைச்சர் அவர்களிடம் தெரிவித்து, உடனே அந்த சாதனம் அங்கு அனுப்பப்பட்டது. இன்றைய தினம் என்னைப் போன்ற இருதய நோயாளிகளுக்கு அத்தகைய சாதனங்கள் மிகவும் தேவைப்படுகின்றது. ஆனால், அந்தச் சாதனம் அங்கு செயல்படுத்தப்படாமல் இருப்பதற்கான காரணம் என்ன? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல இடங்களில் திடீரென்று சோதனையிட்டு, நல்ல பல சாதனைகளை புரிந்திருக்கிறார்கள். எனவே, மாயூரம் பொது மருத்துவ மனையை சோதனையிட்டு, அங்குள்ள குறைபாடுகளை நீக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தற்போது மாயூரம் அரசு பொது மருத்துவ மனையில் 104 படுக்கைகள் இருக்கின்றன. ஏனைய மாநிலங்களின் வட்ட மருத்துவ மனைகளுடன் ஒப்பிடும் போது, சுமார் 3 பங்கு அதிகமாக படுக்கைகளை நம்முடைய தமிழக மருத்துவ மனைகள் பெற்றிருக்கின்றன. ஆகவே, அந்த வகையில் மாயூரம் மருத்துவமனையில் போதுமான படுக்கைகள் இருக்கின்றன என்பது இப்போது தெரிகிறது. இதுபோன்ற வட்ட மருத்துவ மனைகளில் பல முன்னேற்றங்களை ஏற்படுத்த வேண்டுமென்று இன்றைக்கு தமிழகத்தின் முதல் அமைச்சர் அவர்கள் ஒரு திட்டத்தை வகுத்திருக்கிறார்கள். வட்ட மருத்துவ மனைகளிலே இருக்கின்ற அறுவை சிகிச்சை கூடங்களை இன்றைக்கு குளிர் சாதன வசதிகளோடு அமைக்க வேண்டுமென்றும், ஈ.சி.ஜி. போன்ற கருவிகள் அங்கே வைக்க வேண்டுமென்ற கருத்து ஆய்வில் இருக்கிறது. படிப்படியாக இவைகள் செயல்படுத்தப்படும். மேலும், வட்டார மருத்துவ மனைகளில் அபிவிருத்தி செய்வது பற்றி ஒட்டுமொத்தமாக ஒரு பரிசீலனை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதில் முடிவெடுக்கும்போது, மாயூரம் அதில் இணைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தங்களுடைய மேலான அனுமதியோடு, இன்று காலை எனக்கு வந்துள்ள ஒரு தந்தியைப் படிக்கலாம் என்று விரும்புகிறேன்: மாயூரம் மருத்துவ

1979 மார்ச் 22]

மனையிலே ஒரு சம்பவம் நடைபெற்றிருக்கிறது. அந்த தந்தியில், Night duty Hospital Staff assaulted by rowdiesh—Police inactive— Pray immediate intervention—Staff and doctors Mayuram Hospital
என்று வந்திருக்கிறது. அன்புகூர்ந்து, வேறு வழி இல்லாத காரணத்தால், இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு இதைச் சொல்கிறேன். அதற்கு ஆவன செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, தாங்கள் அனுமதி வழங்குவீர்களானால், நான் அதற்கு விடை அளிக்க முற்படுகிறேன். நேற்றையதினம், இது என்னுடைய கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. நான் உடனே தொலைபேசி மூலம் தகுந்த அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு, தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு, நேற்று முதல் இந்த மருத்துவ மனை ஒழுங்காக செயல்படத் தொடங்கிவிட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## மருத்துவப் பட்டதாரிகள்

*வினா எண் 518—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

கடந்த 1976–77 ம் ஆண்டுவரை மருத்துவக் கல்வி படிப்பு முடித்து வேலையில்லாத பட்டதாரி டாக்டர்கள் எத்தனை பேர்கள் ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தமிழ்நாடு அரசு மருத்துவப் பணியில் உதவி மருத்துவர் பதவிக்கு தற்காலிக நியமனம் வேண்டி 1977 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 நாள் வரை 2,766 மருத்துவப் பட்டதாரிகள் விண்ணப்பித்துள்ளனர். இவர்கள் தவிர எத்தனை பட்டதாரிகள் வேலையில்லாதிருந்தனர் என்ற விபரம் அரசு அறிய வாய்ப்பில்லை.

திரு. போ. கோபாலன் : இப்படி விண்ணப்ப செய்திருக்கும் மனுதாரர்களுக்கு வேலை வாய்ப்பு எப்போது கொடுக்கப்படும் ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தமிழ்நாடு அரசு பணியாளர்கள் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப் பட்ட அந்த மருத்துவர்கள் நியமிக்கப்பட்ட பிறகு ஏற்படுகிற காலி இடங்களில் இவர்களை நிரப்ப வழிவகை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முன்வரிசையில் உட்கார்ந்து கொண்டிருக்கும் தலைவர்கள் உட்கார்ந்து கொண்டே பேசக் கூடாது